**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons),**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2056, திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 2–ம் தேதி**

**2026– ம் ஆண்டு மார்ச் மாதம் 16–ம் நாள் திங்கட்கிழமை**

**IA No.12/2024**

**in**

**OS no.195/2019**

**---**

1.இந்திரா (இறப்பு)
2.வெங்கடேஸ்வரி
3.சுரேஷ்குமார்
4.தங்கபாண்டியன்
5.ராதா ....மனுதாரர்கள்/வாதிகள்
(Amended as per order IA.No.6/2022
dated 17.08.2023)

**/எதிர்/**

1.கணேசன்
2.பெரியகருப்புச்சாமி
3.மாரியப்பன்
4.பரமேஸ்வரி
5.திருஞானம்
6.கௌரி
7.கார்த்திகேயன்
8.செந்தில்குமார்
9.சுதா
10.கீதா
11.சரவணக்குமார்
12.கடம்பசாமி (இறப்பு)
(Amended as per order IA No.6/22 dated 17.08.2023)
13.அக்கிராசனாதிபதி
NN605 தொடக்கவேளாண்மை
கூட்டுறவு வங்கி, இடைக்காட்டூர்
14.சார்பதிவாளர், திருப்புவனம்,
15.பாண்டியம்மாள்
16.செல்வி
17.உப்பக்கரை
18.ராஜா
(Amended as per Order I.A No.6/2022
dated 17.08.2023) .....1 முதல் 18எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 12.03.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருA.வீரபாண்டி அவர்கள் ஆஜராகியும் 3, 4, 6 முதல் 11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:02:32 +0530

வழக்கறிஞர் திரு.M.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

பிராதினை சீர்திருத்தம் செய்துகொண்டு, திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் இந்த நிர் வழக்கில் 4ம் மனுதார்/4ம் வாதி என்றும், இதர மனுதார்கள்/வாதிகளுக்கும் சேர்த்தே இந்த அபிடவிட்டை தாக்கல் செய்கிறதாகவும், தாவா வழக்கானது மானாமதுரை முதன்மை டி.மு.கோர்ட்டில் O.S.No 91/2019 என்ற எண்ணில் தாக்கல் செய்து, ஆள்வரை அதிகார வரம்பின் படி சமூகம் நீதிமன்றத்தில் மாறுதலாகி நிலுவையில் இருந்து வருகிறதாகவும், இந்த நிலையில், மனுதாரர் வழக்கு தாக்கல் காலத்தில் அ முதல் உ வரையிலான அ பரிகாரங்களான Null and Void பரிகாரம் மட்டுமே கோரப்பட்டுள்ளதாகவும், மொத்த விஸ்தீரணம் ஏக்கர் 2 செண்ட் 39 ல் வடபுறம் 1 ஏக்கர் 20 செண்ட் எனக் குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், இதில் 4ம் மனுதாரரின் தகப்பனார் முருகேசனுக்கு தென்புறம் ஒரு ஏக்கர் 19 செண்ட் பாகம் உள்ளது என்பதை ஏற்கனவே 6ம் பிரதிவாதி கௌரி என்பவரின் கணவரும், 4ம் மனுதாரரின் தகப்பனார் உடன்பிறந்த சகோதரரும், 4ம் மனுதாரருக்கு பெரியப்பாவுமான பாலசுப்பிரமணியன் ஆவண எண். 2159/1980 என்ற எண்ணில் 02.12.1980 ம் தேதியில் அய்யாவு அம்பலம் மகன் கருப்பையாஅம்பலத்திற்கும், அதேபோல் ஆவண எண்.2158/1980 என்ற எண்ணில் 02.12.1980 ம் தேதியில் அய்யணன் அம்பலம் மகன் கடம்பசாமி என்பவருக்கும் எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணங்களில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும், அதன்படி 4ம் மனுதாரரின் தகப்பனாருக்கு புலஎண்.146/6 புஞ்சை மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 39 செண்டில் தென்புறம் 1 ஏக்கர் 19 செண்ட் 4ம் மனுதாரரின் தகப்பனார் மூலமாக மனுதாரர்களுக்கு பாத்தியமானதாகவும், கடம்பசாமிக்கு எழுதிக்கொடுத்த ஆவண எண்.2158/1980 நாள்:02.12.1980 ம் தேதிய கிரைய ஆவணத்தை Null and Void பரிகாரம் கோர வேண்டியுள்ளதாலும், மேற்படி கிரைய ஆவணம் பற்றிய விபரமும் தாவா வழக்கு தாக்கல் செய்தபிறகு தற்போது தான் மனுதாரர்களுக்கு தெரியவந்ததாகவும், மேலும், வழக்கு தாக்கல் காலத்தில் வில்லங்கப்பதிவில் ஆவண எண். 2158/1980 ஆவணம் ஏதும் பதிவிடப்படாமல்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:02:40 +0530

இருந்ததால், வழக்கு தாக்கல் காலத்தில் மனுதாரர்களுக்கு தெரியாமல் போய்விட்டதாகவும், ஏற்கனவே கடம்பசாமி கிரையம் பெற்ற ஆவணமான 2034/2010 என்ற ஆவணத்தை மனுதாரர்களால் பிராதில் ஆ பரிகாரமாக Null and void பரிகாரமும் கோரப்பட்டுள்ளது என்றும், ஷை கடம்பசாமி வழக்கு நிலுவை காலத்தில் 17.01.2021ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், அவரது வாரிசு இவ்வழக்கில் கண்ட 15 முதல் 18 வரை பிரதிவாதிகளும் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி 15 முதல் 18 வரை பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி கடம்பசாமியால் கிரையம் பெற்றுள்ள ஆவண எண். 2158/1980 நாள்: 02.12.1980ம் தேதிய ஆவணத்தைப் பொறுத்து Null and Void பரிகாரமும் பெறவேண்டியுள்ளதாகவும், மேலும் ஆவண எண். 2159/1980 என்ற 02.12.1980 ம் தேதிய கிரைய ஆவணத்தைப் பொறுத்து Null and Void பரிகாரம் மனுதாரர்களால் கோரவேண்டியதும் அவசியமாக உள்ளது என்றும், ஆனால் மேற்படி ஆவணத்தில் கண்ட அய்யாவு அம்பலம் மகன் கருப்பையா என்பவரை தாவாவழக்கில் தரப்பினராகச் சேர்க்கவில்லை என்றும், எனவே மேற்படி கருப்பையா என்பவரை தாவா வழக்கில் 19 ம் பிரதிவாதியாக சேர்ப்பதற்கு சிபிசி ஆர்டர் 1 ரூல் 10(2) ன்படி பிரிதொரு மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படியாரை தரப்பினராகச் சேர்க்கக் கோரும் மனுவில் உத்தரவு ஏற்பட்ட பிறகு ஆவண எண். 2159/1980 என்ற ஆவணத்தைப் பொறுத்து Null and void பரிகாரமும் கோருவதற்கு சீர்திருத்த நடவடிக்கையும் எடுப்பதற்கு தயாராக உள்ளோம் என இதன் மூலம் Undertake செய்து கொள்கிறதாகவும், அதன்படி சர்வே எண். 146/6 ல் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 39 செண்டில் தென்புறம் 1 ஏக்கர் 19 செண்டைப் பொறுத்து எனக்கும், இதர வாதிகளுக்கும் பாத்தியமானது என உரிமை விளம்புகை பரிகாரமும் எங்களால் கோர வேண்டியுள்ளதாகவும், கூடுதல் பரிகாரமாக விளம்புகை பரிகாரமும் அதன் தொடர்ச்சியாக 1 முதல் 11 வரை பிரதிவாதிகளும் 16, 17, 18 பிரதிவாதிகளும் எங்களின் அமைதியான அனுபவத்திற்கு எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் பெறவேண்டியுள்ளதாகவும், அதன்படி பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியதும் அவசியமாக உள்ளது என்றும், எனவே அசல் பிராதினை சீர்திருத்தம் செய்து கொண்டு திருத்தப்பட்ட பிராது தாக்கல் செய்ய அனுமதி அளித்து உத்தரவிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:02:46 +0530

மனுதாரர்களின் பாரா 2, 3, 4, 5ல் சொல்லியுள்ள சங்கதிகளை எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்று மனுதார்கள் கோருவதும் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், தாவா புலஎண். 146/6 சொத்து சம்மந்தமாக மனுதார்கள் / வாதிகள் தங்களது பிராதில் கூறிய வண்ணம் ராசு என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட பாகப்பிரிவினை வழக்கும் திருப்புவனம் டி.மு கோர்ட்டில் O.S.No. 10/2019 என்று நம்பர் ஏற்பட்டு, அதுவும் கடந்த 28.02.2020ம் தேதி தள்ளுபடியாகிவிட்டதாகவும், மேற்படி வழக்கில் இந்த நம்பர் மனுதார்கள்/ வாதிகள், தரப்பினர்களாக இருந்து மேற்படியார்களையும் கட்டுப்படுத்தி தீர்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும், மேற்படி தீர்ப்பினை எதிர்த்து ராசு என்பவர் மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் A.S.No. 23/2020 என்ற மேல்முறையீடு தாக்கல் செய்ததில், மேற்படி மேல்முறையீடும் கடந்த 02.02.2024ம் தேதி தள்ளுபடியாகி விட்டது என்றும், இம்மனுவின் மனுதார் தங்கப்பாண்டியன் உள்ளிட்டோர் மேற்படி நடவடிக்கையில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளனர் என்றும், மேற்படி நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றி நன்கு அறிந்திருந்த மனுதார்கள் தற்பொழுது பொய்யான காரணங்களைக் கூறி இப்புரட்டு வழக்கு தாக்கல் செய்து இம்மனுவையும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேலும் தாவா புலஎண். 146/6 சொத்து உள்ளிட்ட சொத்துக்கள் சம்பந்தமாக 2ம் மனுதாரர் வெங்கடேஸ்வரி வாதியாக இருந்து மானாமதுரை சார்பு நீதிமன்றத்தில் O.S.No. 330/2019 என்ற நம்பரில் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல செய்து மேற்படி வழக்கும் நிலுவையில் இருந்து வருகிறதாகவும், இம்மனுவின் இதர மனுதார்கள் கட்சிக்காரராக இருந்து வாதி வெங்கடேஸ்வரிக்கு ஆதரவாக வழக்கை நடத்தி வருகின்றனர் என்றும், மேற்படி சங்கதிகளை மறைத்து வழக்கை நடத்தாமல் காலம் கடத்தும் நோக்கத்துடன் இப்புரட்டு மனுவை தாக்கல் செய்துள்ளன என்றும், மனுதார்களின் அசல் வழக்கிற்கு மாறான சங்கதிகளை இம்மனுவில் தெரிவித்து பிராதை சீர்திருத்தம் கோரியுள்ள நிலையில் வழக்கின் தன்மையை மாறச் செய்யக் கூடிய சூழ்நிலை உள்ள காரணத்தினால் இம்மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக்கூடிதாக உள்ளது என்றும், ஆகையால் மனுதார்களின் மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:02:53 +0530

4)இருபுறமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) மனுதாரர்கள் அசல் வழக்கின் வாதிகள் ஆவார்கள். மனுதாரர்கள் தரப்பில் பிராதை திருத்தம் செய்ய வேண்டி இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 39 செண்டில் ஒரு ஏக்கர் 20 செண்ட் என குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், இந்த நம்பர் 2 முதல் 5 மனுதாரர்களின் தகப்பனார் முருகேசனுக்கு தென்புறம் 1 ஏக்கர் 19 செண்ட் பாகம் உள்ளது என்பதை ஏற்கனவே 6ம் பிரதிவாதி கௌரி என்பவரின் கணவரும், 2முதல் 5 மனுதாரர்களின் தகப்பனாரோடு உடன்பிறந்த சகோதரரான பாலசுப்பிரமணியன் ஆவண எண்.2159/1980 என்ற எண்ணில் 02.12.1980ம் தேதியில் அய்யாவு அம்பலம் மகன் கருப்பையா அம்பலத்திற்கும் அதேபோல் ஆவண எண்.2158/1980 என்ற எண்ணில் 02.12.1980ம் தேதியில் அய்யனன் அம்பலம் மகன் கடம்பசாமி என்பவருக்கும் எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஆவணங்களில் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் அதன்படி இந்த மனு அபிடவிட்டை தாக்கல் செய்துள்ள மனுதாரரின் தகப்பனாருக்கு புல எண்.146/6 புஞ்சை மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 39 செண்டில் தென்புறம் 1 ஏக்கர் 19 செண்ட் 2 முதல் 5 மனுதாரர்களின் தகப்பனார் மூலம் இந்த மனுதாரர்களுக்கு பாத்தியமானதாகும் என்றும், கடம்பசாமிக்கு எழுதிக்கொடுத்த ஆவண எண்.2158/1980 02.12.1980ம் தேதிய கிரைய ஆவணத்தை Null and void பரிகாரம் கோர வேண்டியுள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணம் பற்றிய விபரமும் தாவா வழக்கு தாக்கல் செய்த பிறகு தற்போது தான் மனுதாரர்களுக்கு தெரிய வந்ததாகவும், மேலும் வழக்கு தாக்கல் காலத்தில் வில்லங்க பதிவில் ஆவண எண்.2158/1980 பற்றிய வில்லங்கம் எதுவும் பதிவிடப்படாமல் இருந்ததால் வழக்கு தாக்கல் காலத்தில் மனுதாரர்களுக்கு தெரியாமல் போய்விட்டதாகவும், ஏற்கனவே கடம்பசாமி பெற்ற ஆவணமான 2034/2010 என்ற ஆவணத்தை மனுதாரர்கள் பிராதில் ஆ பரிகாரமாக Null and void பரிகாரம் கோரியுள்ளதாகவும், மேற்படி கடம்பசாமி வழக்கு நிலுவை காலத்தில் 17.01.2021ம் தேதியில் இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுகளாக இவ்வழக்கில் கண்ட 15 முதல் 18 பிரதிவாதிகளும் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி 15 முதல் 18 வரை பிரதிவாதிகளை கட்டுப்படுத்தி கடம்பசாமியால் கிரையம் பெற்றுள்ள ஆவண எண்.2158/1980 நாள்.02.12.1980 ஆவணத்தை பொறுத்து Null and void பரிகாரமும் பெற வேண்டியுள்ளதாகவும், மேலும் ஆவண எண்.2159/1980 என்ற 02.12.1980ம்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:02:58 +0530

தேதியிட்ட கிரைய ஆவணத்தை பொறுத்து Null and void பரிகாரம் மனுதாரர்களால் கோரவேண்டியது அவசியமாக உள்ளதாகவும், ஆனால் மேற்படி ஆவணத்தில் கண்ட அய்யாவு அம்பலம் மகன் கருப்பையா என்பவரை தாவா வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், அதனால் மேற்படி கருப்பையா என்பவரை தாவா வழக்கில் 19வது பிரதிவாதியாக சேர்ப்பதற்கு பிரிதொரு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் உத்தரவு ஏற்பட்ட பிறகு ஆவண எண்.2159/1980 என்ற ஆவணத்தை பொறுத்து Null and void பரிகாரம் கோருவதற்கு சீர்திருத்த நடவடிக்கை எடுப்பதற்கு தயாராக உள்ளோம் என இதன் மூலம் Undertake செய்துகொள்வதாகவும், அதன் படி சர்வே எண்.146/6ல் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 39 செண்டில் தென்புறம் 1 ஏக்கர் 19 செண்டை பொறுத்து மனுதாரருக்கும் இதர வாதிகளுக்கும் பாத்தியமானது என உரிமை விளம்புகை பரிகாரமும் மனுதாரர்கள் கோர வேண்டியுள்ளதாகவும், கூடுதல் பரிகாரமாக விளம்புகை பரிகாரமும், அதன் தொடர்ச்சியாக 1 முதல் 11 பிரதிவாதிகளும் 16, 17, 18 பிரதிவாதிகளும் மனுதாரர்களின் அமைதியான அனுபவத்திற்கு எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், அதன் படி பிராதினை திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும் கண்டு மனுதாரர்கள்/வாதிகளால் இந்த நிர் மனு தாக்கல் செய்யப்பட்டு வாதுரை எடுத்துரைக்கப்பட்டது.

6) மாறாக, எதிர்மனுதாரர்கள் தரப்பில் 8ம் எதிர்மனுதாரர்/8ம் பிரதிவாதி தனக்காகவும், இதர 3, 4, 6, 7, 9 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கும் சேர்த்து கவுண்டர் அபிடவிட் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்களின் அபிடவிட்டில் பத்தி 2 சங்கதிகளை மறுப்பதாகவும், மனுதாரர்கள்/வாதிகள் இந்த எதிர்மனுதாரர்கள் மீதும் இதர எதிர்மனுதாரர்கள் மீதும் Null and void பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்ததில் இந்த எதிர்மனுதாரர்கள் தரப்பில் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்து வழக்கில் ஏற்கனவே சீர்திருத்தங்கள் செய்துவிட்டு வழக்கு விசாரணைக்காக வாய்தா ஏற்பட்ட நிலையில், நுதனமாக பொய்யான காரணங்களை கூறி இப்புரட்டு மனுவையும் தாக்கல் செய்துள்ளதாகவும், ஏதோ புதிதாக மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 39 செண்டில் வடபுறம் 1 ஏக்கர் 20 செண்ட் என குறிப்பிட்டு கிரையம் செய்துகொடுத்துள்ளதாக கூறியிருப்பதும் இதில் மனுதாரர்களின் தகப்பனார் முருகேசனுக்கு தென்புறம் 1 ஏக்கர் 19 செண்ட் பாகம் உள்ளது என்பதை இந்த எதிர்மனுதாரர்களின் தகப்பனார் 02.12.1980ம் தேதியிட்ட ஆவண எண். 2159/1980 கிரைய ஆவணத்தில்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:03:03 +0530

ஒப்புக்கொண்டதாக கூறியிருப்பதை ஆட்சேபிப்பதாகவும், புல எண்.146/6 புஞ்சை நிலத்தை தென்புறம் 1 ஏக்கர் 19 செண்ட் மனுதாரர்களின் தகப்பனார் மூலமாக மனுதாரர்களுக்கு பாத்தியமானது என்பது ஆட்சேபிக்கப்படுகிறது என்பதாகும். ஏதோ 02.12.1980ம் தேதியிட்ட ஆவண எண்.2158/1980 கிரைய ஆவணம் பற்றி மனுதாரர்களுக்கு தற்போது தெரிய வந்ததாக கூறுவதும் ஆட்சேபிக்கப்படுவதாகவும், புல எண்.146/6ல் மொத்த விஸ்தீரணம் 2 ஏக்கர் 39 செண்டில் தென்புறம் 1 ஏக்கர் 19 செண்டை பொறுத்து வாதிகளுக்கு பாத்தியமானது என உரிமை விளம்புகை பரிகாரம் கோர வேண்டியதாக உள்ளது என்பதும் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்பதும் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் கண்ட சங்கதிகளுக்கு மாறான நிலைப்பாட்டினை எடுத்து மனுதாரர்களால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள் கோரும் சீர்திருத்தம் சம்பந்தமான வியாஜ்ஜியமூலமும் அசல் வழக்கிற்கு மாறுபாடாக உள்ளதாகவும், அதற்கு மாறாக, பிராதை சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற மனுதாரர்கள் கோருவதும் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மேலும் உபய வாதிகளுக்கு இடையே நடைபெற்ற இதர வழக்கு சம்பந்தமாகவும் தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இருபுறமும் கேட்கப்பட்டதிலிருந்தும் வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததிலிருந்தும் மனுதாரர் தாவா பிராதில் ஆவண எண்.2158/1980ஐ பொறுத்து Null and void பரிகாரம் கோர வேண்டியும், தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியமுடையது என்ற விளம்புகை பரிகாரமும், அதன் பின்தொடர்ச்சியாக பிரதிவாதிகள் வாதிகளின் அனுபவத்தை தடை செய்யக்கூடாதென்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், அதற்கான மவுண்ட் விபரம் செலுத்துவதற்கு ஏதுவாக பிராதின் மவுண்ட் காலத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டியும் பிராதின் பரிகார காலத்தில் கேட்டுள்ள பரிகாரத்தின் வரிசையினை மாற்றி அமைத்திட ஏதுவாக பிராதை திருத்தம் செய்ய வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டடுள்ளது என்பதை அறிய முடிகிறது.

8) ஏற்கனவே மேற்படி கிரையம் வாங்கிய நபரை தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்ட நிலையில், அதுகுறித்த பிராதை திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்பதாலும், பிராதின் பரிகார காலத்தை பொறுத்து என்ன பரிகாரம் கோர வேண்டும் என்ற உரிமை வாதிக்கு உள்ளது என்ற அடிப்படையிலும், பிராதினை திருத்த வாதிகளுக்கு அனுமதி அளித்து இந்த நிர் மனு அனுமதிக்க

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:03:08 +0530

வேண்டியது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், ஆவண எண்.2159/1980 ஐ பொறுத்து Null and void பரிகாரம் எதுவும் கோருவதற்கு ஏதுவாக பிராதினை திருத்தம் செய்ய இந்த நிர் மனுவில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதையும் அறிய முடிகிறது.

9) **முடிவாக**, மனுதாரர் பிராது திருத்த விபரத்தில் கோரியுள்ளவாறு பிராதினை திருத்தம் செய்திட ஏதுவாக பிராது திருத்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் வருடம் மார்ச் மாதம் 16–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:03:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

| |
|---|
| மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

| |
|---|
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை |

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2026.03.16 16:03:18 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை**
**நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**IA No.12/2024 in OS no.195/2019**
**உத்தரவு**
**நாள்:16.03.2026**